Nallur Branch Library

யாழ்நகரில்
தரமான
A/L 86
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, Jaffna.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

88 IIIம் பிரிவு
A/L வகுப்புக்கள் ஆரம்பம்:
02-08-1986 சனி காலை
9 30 மணி
PHYSICS 9 30 - 10.30
CHEMISTRY 10.30 - 11.30
ZOOLOGY 11 30 - 12.30
BOTANY 12.30 - 1.30
PURE & APP. MATHS 11.30 - 1.30
விபரங்கட்கு:-
New Master
Institute
B.M.C. Lane, Jaffna

சுடர்:-1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 19 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 துல்கஃதா பிறை 27 (04.08.1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி:- 2

மட்டக்களப்பில் நேற்று முதல் தீவிர தேடுதல்

வடக்கிலிருந்து போராளிகள் வந்திருப்பதாகக் கூறிக் கிராமம் கிராமமாக சோதனை

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, ஆக.4

கிழக்கு மாகாணத்தில் நேற்றுத் தொடக்கம்பெரும் அளவிலான தேடுதல் நடவடிக்கையில் ஆயுதப்படைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வடபகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான போராளிகள் கிழக்குக் கரையோரத்தில் வந்திறங்கயதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே தேடுதல்பணி முழு மூச்சுடன் இடம் பெறுவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

முறக்கொட்டாஞ்சேனை, கொடுவாமடு, குமாச்சேனை, கிரான் ஆகிய பகுதிகள் நூற்றுக்கணக்கான சிப்பாய்களினால் சுற்றிவளைக்கப்பட்டு நேற்றுத் தேடுதல்கள் நடத்தப்பட்டன.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இராணுவமுகாம்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

பிரதான வீதிகள் தடை செய்யப்பட்டு, வாகனங்கள் மறிக்கப்பட்டுச் சோதனை இடப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமம் கிராமமாகத் தேடுதல் வேட்டை மேலும் தீவிரப்படுத்தப்படும் என அறியவருகிறது.

ஆயுதப்படைகளின் தேடுதல் வேட்டை தொடங்கியதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (அ-எ)

விடுதலைப் புலிகளில் எழுவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 4

மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் முகாமொன்றில் நேற்று தற்செயலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் 7 பேர் (4 ஆம் பக்கம் பார்க்க)

பொத்துவில் பஸ் நிலையத்தில் தலைவேறு, கால்வேறாக கிடந்த சடலங்கள்

கல்முனை, ஆக. 4

நேற்றுக் காலை பொத்துவில் பஸ் நிலையத்தில் மூன்று மனித சடலங்கள் தலைவேறு, கால்வேறு, கைவேறான நிலையில் கிடக்கக் காணப்பட்டன.

இச்சடலங்கள் சிங்களக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர்களுடையவை என்று பின்னர் அடையாளம் காணப்பட்டன.

இன்ஸ்பெக்டர் ஏத்தம் என்ற பகுதியில் பேக்கரி தொழில்செய்துவந்த சிங்களக் குடும்பமே அது (4 ஆம் பக்கம் பார்க்க)

வயாவிளான் மினி முகாம் விரைவில் அகற்றப்படும்

தம்மைச் சந்தித்த குழுவிடம் இணைப்பதிகாரி உறுதி

தெல்லிப்பழை ஆக 4

அடுத்த பாடசாலைத் தவணைக்காலம் ஆரம்பமாகும் முன்னர் வயாவிளான் மகா வித்தியாலயத்தில் உள்ள முகாமை இராணுவம் விலக்கிக் கொள்ளும்.

இப்படி வடபகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதி மக்கள் குழு ஒன்று பிரிகேடியர் ரூபசிங்காவை நேற்றுக்காலை சந்தித்துப் பேசியது.

இச்சந்திப்பை மயிலிட்டிக்கரைப் பிரசைகள் குழுச் செயலாளர் திரு. வீ. இரத்தினராஜா ஒழுங்கு செய்திருந்தார்.

வயாவிளான் பகுதியில் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாது. மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இணைப்பதிகாரி குழுவைக் கேட்டுக் கொண்டார். (இ-எ-68)

மிளகாய் விற்றுவிட்டு திரும்பியவர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 4

மிளகாய் விற்றுவிட்டு திரும்பியவரை சிப்பாய்கள் கைது செய்தனர்.

நேற்று வவுனியா நகரில் மிளகாய் வியாபாரம் முடிந்து திரும்பிக்கொண்டிருந்த ஒருவரை வவுனியா கச்சேரி முன்பாக (4 ஆம் பக்கம் பார்க்க)

கெரில்லாப் போர் கம்பன் சொல்லித்தந்தது

யாழ்ப்பாணம். ஆக 4

இப்போது கெரில்லாத் தாக்குதல் இலங்கையில் மட்டுமல்ல ஏனைய உலக நாடுகள் பலவற்றிலும் நடக்கின்றது இந்தப்போரை முதலில் அறிமுகப்படுத்தியவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன் தான்.

கம்பராமாயணம் படித்தவர்கள் கெரில்லாப் போரை அறியாதிருக்க முடியாது.

கெரில்லாத்தாக்குதலை எம் இளைஞர்கள் கம்பராமாயணத்திலிருந்து தான் கற்றிருக்க வேண்டும்.

இராமன் வாலியை கெரில்லா முறையிலேயே தாக்கினான். இதனால் கெரில்லாத்தாக்குதல் தமிழர் மரபானது என்றும் முறையானது என்றும் தெரிகிறது.

இவ்வாறு கம்பன் விழா அமைப்பாளர் இ ஜெயராஜ் கூறினார்.

கம்பன் விழாவின் மூன்று நாள் நிகழ்ச்சி நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றபோது அதில் ''வாலி வதைபடலம்'' பற்றி பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். (இ-5)

முச்சந்தி முரளி

பாத்தீங்களோ, பாத்தீங்களோ சுத்திச் சுத்தி பழைய குருடி கதவைத் திறவடி என்ட கதை தான் வரும்போல...

எண்மரையும் விடுவிக்க கோரிக்கை

மட்டக்களப்பு, ஆக 4

கடத்தப்பட்ட எட்டு தமிழ்ப் பிரமுகர்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்க!

இப்படி மட்டக்களப்புப் பிரசைகள் குழு, நேற்று வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இக்கடத்தல் பற்றி ஆராய்ந்த பின்னரே குழு மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-எ-21)

ஜனாதிபதி மீண்டும் போர்க் கொடி:

சமாதான முயற்சி தோற்றால் இராணுவ நடவடிக்கை

அப்பொழுது அரசின் தலைமையில் மக்கள் அணிதிரள வேண்டும்

கொழும்பு, ஆக 4

சமாதான முயற்சிகள் ஏதாவது ஒரு காரணத்தினால் தோல்வி கண்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும்.

அப்போது மக்கள் அனைவரும் அரசின் தலைமையில் அணிதிரள வேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன மீண்டும் போர்க்குரல் எழுப்பி இருக்கிறார்.

நேற்றுப்பகல் கென்னபுவையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் இக்கருத்தை வெளியிட்டார்.

* இந்த நாட்டுக்கு சமஷ்டி அரசமைப்பு பொருத்தமற்றது.

* வடக்கு — கிழக்கு இணைப்பு இல்லை

* தற்போதைய மாகாண எல்லைகளை மாற்ற அனுமதிக்க மாட்டோம்.

மேற்கண்டவற்றை ஜனாதிபதி அக்கூட்டத்தில் வலியுறுத்திச் சொன்னார்

ஜனாதிபதி மேலும் சொன்னதாவது:

மாகாணசபை முறையினால் ஜனாதிபதியின் நிர்வாக அதிகாரம், நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பறிக்கப்படமாட்டா.

எந்தத் தீர்வும் ஐக்கிய இலங்கை அமைப்பின் கீழ் தான் தீர்வுகாணப்படும்.

தற்போதைய சண்டை முடியும்வரை தேர்தல் நடத்தப்படமாட்டாது.

பாதுகாப்பு நடவடிக்கைக்காக 900 கோடி வரையில் செலவிடப்படுகின்றது.

நாட்டில் அமைதி திரும்பியவுடன் இப்பணத்தை உணவு முத்திரைத் திட்டத்தை விஸ்தரிக்கப் பயன் படுத்தக் கூடியதாக இருக்கும்—

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

செல்வச் சந்நிதி ஆலய பூஜைகள் நாளை முதல் நடைபெற ஏற்பாடு

தெல்லிப்பழை, ஆக.4

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய நித்திய பூஜைகள் நாளை முதல் நடைபெற வடபகுதி இணைப்பதிகாரி அனுமதி வழங்கியிருக்கின்றார்.

ஆலய பரிபாலனசபைக் குழு ஒன்று நேற்றுக் காலை இணைப்பதிகாரியைச் சந்தித்துப் பேசியது.

அப்போது தான் இந்த அனுமதியை இணைப்பதிகாரி வழங்கினார்.

இது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்ய தொண்டமானாறு ஊடாக முக்குத்தான் செல்ல இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பை ஒழுங்கு செய்த மயிலிட்டிக்கரை (4 ஆம் பக்கம் பார்க்க)

பூஸாவிலிருந்து 8 பேர் விடுதலை

திருகோணமலை, ஆக 4

பூஸாவில் இருந்து 8 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில் இருவர் சிங்களவர்கள். கந்தளாய் வாசிகள் ஏனையோர் தமிழர். (இ-எ-150)

சுபநேரம்

04—08—1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
12-04 முதல் 1-34 வரை
ராகுகாலம்:
7 34 முதல் 9-04 வரை
[illegible] பொருந்தும்

சோடா லொறி பாலத்தில் புரண்டது

கைதடி, ஆக 4

கைதடி — கோப்பாய் வீதிப் பாலத்தில் லொறி ஒன்று தடம் புரண்டது.

சனிக்கிழமை இரவு இச் சம்பவம் நடந்தது.

கொழும்பில் இருந்து பெப்சிகோலா, பார்லி மார்க் சோடா போன்றவற்றை ஏற்றி வந்த லொறியே தடம் புரண்டது.

இதனால் பெருமளவு சோடாப் போத்தல்கள் உடைந்து நொருங்கின.

லொறியைச் செலுத்தி வந்த நயினா (வயது 55) என அழைக்கப்படும் சாரதி யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். கிளீனர் காயம் இன்றித் தப்பினார். (இ-74)

இலங்கையின் புதிய அமெரிக்க தூதர்

கொழும்பு, ஆக. 4

இலங்கைக்கு திரு. [illegible] என்பவரை புதிய தூதராக அமெரிக்கா நியமிக்கத் தீர்மானித்து உள்ளது.

அமெரிக்காவில் தற்போது இலங்கைத் தூதுவரான திரு. எர்னஸ்ட் கொரியா ஆகஸ்ட் 20 இல் ஓய்வு பெறுகின்றார். (இ-எ)

தமிழர்பிரச்சினை: இந்தியாவுக்கு எதிராக திருப்பிவிடும் முயற்சி

ரஷ்யத் தலைவர் தகவல்

மாஸ்கோ, ஆக. 3

இலங்கைத் தமிழர் பிரச்சினையை இந்தியாவுக்கு எதிராக திருப்பிவிடும் முயற்சியில் ஏகாதிபத்திய சக்திகள் ஈடுபட்டு உள்ளன.

இப்படி ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

ரஷ்யாவின் விளாடிவொஸ்ரொக்கில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடு எப்படி இடம் பெறுகின்றது என்பது பற்றி திரு. கோர்பச்சேவ் விவரித்தார்.

அப்போதுதான் ரஷ்யத் தலைவர், இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றிக் குறிப்பிட்டார்.

எங்கெங்கு சுதந்திரம் உண்மையான சர்வதேச மதிப்பைப் பெறுகின்றதோ, அங்கெல்லாம் ஏகாதிபத்திய சக்திகளின் பயமுறுத்தலும் அதற்கு எதிராகக் கிளம்புகிறது.

இச்சக்திகள் வழமையான தங்கள் நடைமுறைகளைக் கையாளத் தொடங்குகின்றன.

பொருளாதார ரீதியிலான முட்டுக்கட்டை, சம்பந்தப்பட்ட நாட்டின் தலைமைத்துவத்துக்கு எதிரான சதிகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுதல் ஆகியனவே அவையாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பஞ்சாப்பிரச்சினை ஆகியன இந்தியாவுக்கு எதிராகப் பாவிக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

பூஸா சென்றுல் பெண்புலிகள் என நையாண்டி

கல்முனை, ஆக 4

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களைப் பார்க்கச் செல்லும் தமிழ்த் தாய்மாரைப்பார்த்து அங்குள்ள சிங்களப் பெண்கள் 'பெண்புலிகள்' என்று நையாண்டி செய்கிறார்களாம்.

அதுமட்டும் அல்ல, தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்குக் கொண்டு செல்லப்படும் உணவுப்பார்சலை 'குண்டுப்பார்சல்' என்று கூறி சிங்களப் பெண்கள் பயமுறுத்துகிறார்கள்.

பூஸா சென்று திரும்பிய அக்கரைப்பற்றுத் தமிழ் தாய்மார் மேற்கண்ட தகவல்களை அக்கரைப்பற்று பிரசைகள் குழுவிடம் தெரிவித்தனர் (இ-ஒ-84

வீரப்பன் போட்டியிடுவார்

சென்னை, ஆக 4

தமிழக அமைச்சர் இரா. வீரப்பன் திருநெல்வேலி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிடுவார்.

அருப்புக் கோட்டை இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளராக திரு பஞ்சவர்ணம் என்பவர் போட்டியிடுவார்.

ஆகஸ்ட் 31 இல் இடைத்தேர்தல்கள் இடம்பெறும். (இ-எ)

பட்டிருப்பில் துப்பாக்கிப் பிரயோகம்

கல்முனை, ஆக 4

நேற்றுப் பிற்பகலில் இருந்து பட்டிருப்புத் தொகுதியில் உள்ள மகிழூர்முனைக் கிராமத்தில் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் வந்துள்ளன.

களுவாஞ்சிக்குடி பொலிஸாரின் தேடுதல் வேட்டையின்போது இத்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வாவியைத் தாண்டி கோட்டைக்கல்லாறு சென்றதாகத் தெரிகிறது (இ-எ-84)

ரி. வி. பார்த்துவிட்டு வந்த இளைஞர்களை சிருடையினர் கூட்டிச் சென்றனர்

யாழ்ப்பாணம், ஆக 4

வவுனியாவில் மன்னார் வீதியோரமாகச் சென்ற சீருடையினர் ரி.வி பார்த்து விட்டு வந்த இளைஞர்களை கைது செய்தனர்

சம்பவம் பற்றி அறியவருவதாவது:-

சனிக்கிழமை இரவு இருநூறுக்கும் மேற்பட்ட சீருடையினர் வேப்பங்குளம், நெளுக்குளம் பகுதிகளில் பதுங்கிப் படுத்திருந்தனர்.

அப்பொழுது ரீ.வி. பார்த்து விட்டு வந்த மூன்று இளைஞர்களை கைது செய்து வழிகாட்டுமாறு தம்முடன் அழைத்துச் சென்றனர்.

சீருடையினர் மன்னார் றோட்டில் ஆறும் கட்டைப் படியில் நேற்றுவரை சென்றுகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

கைது செய்யப்பட்டோர் விவரம் வருமாறு: காளிமுத்து சுதபகுமார் (வயது 18) முத்தையா இராசேந்திரம் (வயது26) அப்புக்குட்டி அமிர்தலிங்கம் (வயது 22)

இவர்கள் அனைவரும் வேப்பங்குளத்தைச் சேர்ந்தவர்கள்.

இது விடயமாக வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவினர் வவுனியா இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர்

அப்படி எவரையும் தாம் கைது செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாம். (இ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

கடலட்டை, சங்கு ஏற்றுமதி ஸ்தம்பிதம்

பண்டத்தரிப்பு, ஆக 4 கடற் பாதுகாப்பு வலயத் தடையால் கடலட்டை ஏற்றுமதியும், சங்கு ஏற்றுமதியும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன இத்தொழிலை நம்பி வாழ்ந்த பலநூறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளரும், ஆனைக்கோட்டை சாவற்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்றுமதிக்குழு உறுப்பினருமான நாகநாதர் பொன்னம்பலம் இப்படிக் கவலை தெரிவிக்கின்றார்

கடலட்டை ஏற்றுமதியால் வட்டுக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பல லட்சம் ரூபா வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்தது.

ஆனைக்கோட்டை சாவற்காடு சங்கம், சங்கு, கடலட்டை ஏற்றுமதிமூலம் பெரும் சம்பாத்தியத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது (இ-120)

திருட்டைஒழிக்க விழிப்புக்குழு

சாவகச்சேரி, ஆக 4 கல்வயல், மட்டுவில் தெற்குப் பகுதிகளில் அடிக்கடி இடம்பெறுகின்ற திருட்டுக்களை ஒழிக்கும் பொருட்டு மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்தா சனசமூக நிலயத்தினர் விழிப்புக் குழுக்களைச் செயற்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இரவு ஒன்பது மணி முதல் காலை ஐந்து மணி வரை கடமையில் ஈடுபட்டுவரும் இக்குழுவினருடன் கிராமியத்தொண்டர்களும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் (இ-31)

பனம்பானவகைகளின் தரம் உயர்ந்துள்ளது

பலாலி, ஆக 4 பனை அபிவிருத்திச் சபை மூலம் ஏற்படுத்தப்பட்ட புதிய ஆராய்ச்சி முயற்சிகளின் பயனாக பனம்பொருள் உற்பத்திகள் குறிப்பாக பான வகைகளின் தரம் உயர்ந்துள்ளது

தமது அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க நடராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் பனம் கோடியல், பனம் சிரப், பனம் ஜம் என்பன இன்று மிகத் தரமானதாகக் கருதப்பட்டு தென்னிலங்கையில் அதிக அளவில் நுகரப்படுகின்றன.

பனை அபிவிருத்திச் சபையினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய பானமாகிய ''பாம் கோலா'' வும் பனை அபிவிருத்திச்சபையின் அனுசரணையுடன் உற்பத்தி செய்து விற்பனைக்கு வந்துள்ள 'பல்மேராலிக்கர்' (பனம் சாராயம்) என்பன ஏற்றுமதித் தரத்தை அடைந்துள்ளன.

உள்நாட்டு மக்களின் பாவனைக்கு மட்டுமே தற்போது அவை விநியோகிக்கப்படுகின்றன.

இப்படி அவர் மேலும் சொன்னார் (இ-119)

மாணவர்களைப் பாராட்டவே பரிசளிப்பு

வட்டுக்கோட்டை, ஆக 4 மாணவர்கள் படித்த பாடங்களில் காட்டிய திறமைகளைப் பாராட்டவும் ஏனைய மாணவர்களுக்கு உற்சாகமளிக்கவுமே பரிசளிப்பு விழாக்கள் நடைபெறுகின்றன

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிலும் முன்னைநாள் அதிபர்களின் உருவப்பட திரைநீக்க விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. கா. சந்திரராசா மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. இ. கருணாநிதி தலைமையில் விழா நடைபெற்றது

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பு நிர்வாகி திரு நா. வேலுப்பிள்ளை பேசும்போது இப்பாடசாலையை ஒரு மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்துவதற்கு தன்னாலான உதவிகளைச் செய்வதாகவும் போதியளவு ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

முன்னைநாள் அதிபர்கள் திரு. கி துரைசுவாமி, திரு மா. தம்பிராசா, திரு வே தம்பையா ஆகியோரும் உரையாற்றினர்.

திரு கா. சந்திரராசா மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

வட்டுக்கோட்டை சாந்திஜி கலாமன்றத்தினரின் 'பக்த மார்க்கண்டேயர்' என்னும் நாடகமும் பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன (இ-161)

வவுனியாவில் பொம்மர்

யாழ்ப்பாணம், ஆக 4 வவுனியா நகரில் பொம்மர் விமானம் ரோந்து சுற்றத் தொடங்கியுள்ளது

சனி காலையும் மாலையும் வவுனியா இராணுவ முகாமை உள்ளடக்கிய பகுதிகளையும் கஸ்தியப் பகுதிகளையும் இந்த விமானம் நோட்டம் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ-10)

விவசாய திணைக்களம் மறுப்பு

யாழ்ப்பாணம் ஆக 4 விவசாய திணைக்களம் மகாஇலுப்பளம, வெலவெர விவசாயப் பண்ணைகளில் இருந்து உருளைக்கிழங்கு விதைபொருள்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து விநியோகிக்க மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்து லொறிகளை அனுப்பி விதைபொருள்களைத் தருவிக்க யாழ் செயலகம் நடவடிக்கை எடுக்கவுள்ளது இது சம்பந்தமாக லொறி உரிமையாளர்களிடம் இருந்து விலைகள் கோரப்பட்டுள்ளன. (உ-9)

யாழ்ப்பாண அரசர்கள் பற்றி வரலாற்றுக் காவியம் தேவை

கம்பன் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக.4 யாழ்ப்பாண அரசர்களின் வீரசாகஸ, கருமநெறிகளை காட்டும் வண்ணம் ஓர் வரலாற்றுக் காவியம் புனையப்படுவது அவசியம்.

பண்டிதர் க. சச்சிதானந்தம் இப்படிக் கூறினார்

இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் இரண்டாம் நாள் விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது!

இன்று எமது வரலாறுகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டு, திரிபுபடுத்தப்பட்டு மாற்றானால் மாற்றப்பட்டு வருகின்றன.

இதனால் எமது முன்னைய வரலாற்றை வரும் வரலாற்றுக் காலத்திலும் கூறி நிற்கும்படியான காவியங்கள் புனையப்பட வேண்டும்.

சிங்கள ஆதிக்கம் தமிழ் மண்ணில் 16 ஆண்டுகள் மட்டுமே இருந்தது

இது இன்றைய அரசால் திரித்துக் கூறப்பட்டு; தமிழ் மண்ணை சிங்களவரே காலாகாலமாக ஆண்டதாக கூறப்படுகிறது

சிங்கள மன்னர்களை குருநாகல் வரை ஓட விரட்டிய தமிழ் மன்னர்கள் பரராஜசேகரன், செகராஜசேகரன் போன்றோரின் சரித்திரங்கள் காவியமாக்கப்பட வேண்டும்.

நாம் ஆண்ட பரம்பரை என்பதையும், போத்துக்கேசர் இலங்கைக்கு வரும்முன் இருந்த நிலைமையையே நாம் கேட்கின்றோம் என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஆர். புண்ணியமூர்த்தி குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமான இவ்விழாவை திரு க. ஆனந்தகுமார் மங்கள விளக்கேற்றி தொடக்கி வைத்தார்

விழா அமைப்பாளர் இ ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்

கவிஞர் வே ஐயாத்துரை தொடக்கவுரை நிகழ்த்தினார்.

கவிஞர் இ முருகையன் தலைமையில் ''கம்பன் தலைமையில் கவிஞர்கள் கூடி நம் தமிழ் நாட்டின் நலிவுகள் சொல்வர்'' எனும் பொருளில் கவியரங்கம் நடைபெற்றது.

இதில் கவிஞர் சு வே. பஞ்சாட்சரம், கவிஞர் சோ. பத்மநாதன், கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி, கவிஞர் ஜெ. கி. ஜெயசீலன், கவிஞர் க. பொ நடனசிகாமணி, கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5)

கடைக்காரருக்கு திருடர் தந்த பரிசு

யாழ்ப்பாணம், ஆக 4 நள்ளிரவு இடம்பெற்ற கடை உடைப்புச் சம்பவம் ஒன்றில் திருடர்கள் தமது சைக்கிளை விட்டு விட்டு சவர்க்காரச் சாமான்களுடன் ஓடினர்

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது,

சிவலிங்கப்புளியடியிலுள்ள கடை ஒன்றில் நள்ளிரவு இரண்டு மணியளவில் இரு திருடர்கள் நுழைந்தனர்.

முன்னால் இருந்த கராஜ் ஒன்றில் படுத்திருந்தவர்கள் சத்தம் கேட்டுச் சென்று பார்த்தனர்.

ஆட்களை கண்டதும் கடையுடைத்து களவில் ஈடுபட்டிருந்த இருவரும் அகப்பட்ட பொருள்களுடன் தப்பி ஓடினர்

ஓடுகையில் தம்முடைய சைக்கிளையும் விட்டுவிட்டுச் சென்றனர்

சைக்கிளை விட்டுச் சென்றார்கள் கொண்டு சென்ற பொருள்கள் சவர்க்காரம், சிகரெட், நெஸ்பிறே, ஹோர்லிக்ஸ் மட்டுமே (இ-5)

உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு ஓரளவு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக 4 1983-84இல் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுப் பெருமழை காரணமாக நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்கைப் பெறச் செலவு செய்யப்பட்ட போக்குவரத்துச் செலவை மீளளிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது

யாழ் மாவட்ட விவசாய அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானத்துக்கு அமைய இப்பணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது

இப்பணம் விவசாயிகளுக்கு, அவர்கள் பெற்ற விதை உருளைக்கிழங்குப் பெட்டிக்கேற்ப பாரபட்சமின்றிப் பகிர்ந்தளிக்கப்படுமென்று கூட்டுறவுச் சங்கங்கள் உறுதி அளித்துள்ளன

சுமார் இரண்டரை லட்சம் ரூபா இப்படி மீளளிப்புச் செய்யப்படும். (இ-எ)

மக்கள் முகம்

இணக்க சபை தலைவர்

சாவகச்சேரி, ஆக.4 நுணாவில் கிராம சேவகர் பிரிவுக்கான இணக்க சபையின் தலைவராக இளைப்பாறிய இந்துக் கல்லூரி அதிபர் திரு பூ. வெற்றிவேலு தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தம் எழுபேர் கொண்ட இச்சபையின் செயலாளராக சாவகச்சேரி ப நோ கூ. சங்கத் தலைவர் திரு எஸ் சி வைத்திலிங்கம் தெரிவானார். (இ-31)

இருவரை கட்டிவைத்து அடித்த சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஆக 4 வவுனியாவில் சிப்பாய்கள் இருவரைக் கட்டி வைத்து தாக்கினராம்.

சனிக்கிழமை இச்சம்பவம் நடந்தது

வவுனியா இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வீதிகளில் தென்பட்ட பொது மக்களை கண்டபடி தாக்கினர்

இதன் பின்னர் இரண்டு இளைஞர்களை கைது செய்து மின்கம்பமொன்றுடன் கட்டி வைத்து தாக்கினர் என்று கூறப்படுகிறது

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் கடைகள் இழுத்து மூடப்பட்டன. மக்கள் சிதறி ஓடினார்கள்

இதன் பின்னர் அந்த இருவரையும் சிப்பாய்கள் முகாமுக்கு அழைத்துச் சென்றனர். (இ-10)

கட்டுவனில் கிறிஸ்தவர் கஷ்டம்

பலாலி, ஆக 4 கட்டுவன் மேற்கு 10-ம் பத்திநாதர் கோயில் நீண்ட காலமாக வழிபாடுகள் இன்றி இருக்கிறது.

அதனால் கிறிஸ்தவ மக்கள் பூசைமுகம் காணாது இருக்கின்றார்கள்.

அவர்கள் நீண்ட தூரத்தில் இருக்கும் வயாவிளான் ஆலயங்களுக்கே சென்று வந்தனர்

ஆனால் அண்மையில் அமைக்கப்பட்ட வயாவிளான் மினி இராணுவ முகாமினால் அங்கும் செல்ல முடியாது இருக்கிறது.

ஆகத் தொடர்ந்து கட்டுவனில் திருவழிபாட்டுக்குரிய ஒழுங்குகளைச் செய்துதருமாறும் பங்குத்தந்தை ஒருவரை நியமிக்குமாறும் அப்பகுதிக் கிறிஸ்தவ மக்கள் யாழ் மேற்றிராணியாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர், (அ-119)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்
★ பிரான்ஸ்
★ ஜேர்மன்
★ கனடா

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட், (BOND) ரிக்கட்
ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

சட்ட விரோத மின்பாவனையாளர்களை

தண்டிக்கத் தவறினால் இருளில் மூழ்கும் ஆபத்து

கருத்தரங்கில் உரை

உடுவில், ஆக 4 சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரைத் தண்டிக்க நாம் தவறுவோமானால் எதிர்காலத்தில் சுன்னாகம் பிரதேசம் முழுமையாக இருளில் மூழ்கும். எனவே எமது மண்ணை நேசிப்போரும் எமது மக்களை நல்வழிப் படுத்த விரும்புவோரும் சட்டவிரோத மின்சாரத்தைப் பெறுவோருக்கு அதன் தாக்கத்தை விளக்க வேண்டும். இதன் மூலமே சட்டவிரோத மின் இணைப்புக்களை இல்லாதொழிக்க முடியும்.

சுன்னாகம் இந்து வாலிபர் சங்கப் போஷகர் சட்டத்தரணி பூ. தம்பிப்பிள்ளை சதாசிவரத்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.

“சட்டவிரோத மின் இணைப்பினால் ஏற்படும் நஷ்டங்கள்” பற்றிய கருத்தரங்கை சுன்னாகம் முற்போக்கு வாலிபர் ஒன்றியம் நடத்தியது.

ஒன்றியத்தின் தலைவர் திரு க. சிவராஜா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சுன்னாகம் பிரசைகள்குழு செயலாளர் திரு இ. சுப்பிரமணியம் பேசுகையில், “மக்கள் மின் இணைப்புக் கோரி விண்ணப்பிக்கும் போது மின் இணைப்பு வழங்கப்படாத நிலையிலேயே அவர்கள் சட்டவிரோதமாக மின்சாரம் பெற தூண்டப்படுகின்றனர்.

இப்போது பல மின் மாற்றிகள் நிறுவப்பட்டதால் மக்களுக்கு மின் விநியோகம் செய்ய முடியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த உண்மையை மக்களுக்கு உணர்த்த சகல பொதுநல ஸ்தாபனங்களும் இது போன்ற கருத்தரங்குகளை நடத்துவது அவசியம்.

இப்படி அவர் கூறினார்.

இளைஞர் அமைப்புக்களில் இருந்தும் பிரதிநிதிகள் கருத்தரங்கில் பேசினர். (இ-27)

நல்லூர்க் கந்தன் உற்சவம்:

தொண்டர் சேவையை விரிவுபடுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 4 நல்லூர்க் கந்தன் உற்சவ காலத் தொண்டர் சேவையை இம்முறை வழமையைவிட விரிவாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை மேற்கொண்டுள்ளது.

யாழ் மாவட்ட இந்து இளைஞர் மன்றங்களின் தொண்டர் பிரிவுகளுக்கு இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றையும் பேரவை அனுப்பிவைத்துள்ளது.

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு 25 தினங்களும் இந்த இளைஞர் தொண்டர்களது பணிகள் பற்றியும், சேவை ஒழுங்குகள் பற்றியும் ஆராய்வதற்கான விசேஷ கூட்டம் ஒன்றும் நடைபெற இருந்தது.(இ)

பம்பாய் வெங்காயம் சந்தைப்படுத்தும் பகுதியும் கொள்வனவு செய்யும்

யாழ்ப்பாணம், ஆக 4 சந்தைப்படுத்தும் திணைக்களமும் வடபகுதி விவசாயிகளிடம் இருந்து இன்றுமுதல் பம்பாய் வெங்காயத்தைக் கொள்வனவு செய்யத் தொடங்கி உள்ளது

இதுவரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே கொள்வனவில் ஈடுபட்டு வந்தன.

சந்தைப்படுத்தும் திணைக்களமும் கொள்வனவில் ஈடுபடத் தொடங்கியுள்ளதால் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளை நல்ல விலைக்குச் சந்தைப் படுத்தும் வாய்ப்புக் கிடைத்துள்ளது (இ-எ)

மேலைநாட்டு வசதி இலங்கையில் இல்லை

பொருட்காட்சி விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஆக 4 இங்கிலாந்து போன்ற மேலைநாடுகளில் ஒரு மிருகத்தைப் பற்றிக் கற்பிக்கும்போது அந்த மிருகத்தையே உயிரோடு நேரில் காட்டி மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடிய வசதிகள் உண்டு ஆனால் இலங்கையில் இதுபோன்ற வசதிகள் இல்லை. அதனால் உருவங்களையும் படங்களையும் காட்டியே கற்பிக்க வேண்டியுள்ளது.

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்விப் பொருட்காட்சியைத் திறந்து வைத்தும் பார்வையிட்டும் உரையாற்றிய வட. மாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு க. அருணாசலம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு நா க தர்மரத்தினம் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. க அருணாசலம் தொடர்ந்து உரையாற்றும்போது, கல்விப் பொருட்காட்சிகள் மாணவர்களின் சிந்தனைத் திறனையும் கற்பனை வளத்தையும் வெளிக்கொணர ஒரு சிறந்த சாதனமாக விளங்குகின்றன

இன்றைய கல்வித் திட்டம் எத்தகையது? கற்பித்தல் முறைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதையெல்லாம் பெற்றோர்கள் உணர்ந்து கொள்ளவும் இப்பொருட்காட்சிகள் பேருதவி புரிகின்றன என்றார்.

பொருட்காட்சி குழுப் பொறுப்பாளர் திரு க. நல்லையா ஆசிரியர் நன்றி தெரிவித்துப் பேசினார் (இ-161)

உலக உணவுத் திட்டத்தின் கீழ்

கந்தளாய் பகுதி

அகதிகளுக்கு உதவி

திருகோணமலை, ஆக 4 உலக உணவுத் திட்டத்தின்கீழ் கந்தளாயிலுள்ள 3,535 அகதிக் குடும்பங்களுக்கு பல நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கந்தளாய் அணைக்கட்டு உடைப்பின்போது இந்தக் குடும்பங்கள் அனைத்தும் நேரடியாகப் பாதிக்கப்பட்டன.

ஐந்து உறுப்பினரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதமொன்றிற்கு 700 ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்வுதவி தொடர்ந்து 11 மாதங்களுக்கு வழங்கப்படும். அரிசி, அல்லது மா, சீனி, பருப்பு, கருவாடு ஆகிய பொருள்களும் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்படும். (இ-150)

சட்டவிரோத மின் வயர்கள் எரிப்பு

கரவெட்டி, ஆக. 4 நெல்லியடிச் சந்தியில் சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டவர்களின் வயர்கள் எரிக்கப்பட்டன.

வியாழக்கிழமை காலை இச்சம்பவம் நடைபெற்றது இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான லொறி ஒன்றில் பெருந்தொகையான வயர்களை கொண்டுவந்து நெல்லியடிச் சந்தியில் போட்டு எரித்தனர். (இ-70)

உதய சங்கற்பம்

பொறுமையாய் இரு மன்னிக்கும் மனப்பான்மையுடன் இரு. தாராளமாய் இரு ஒழுங்கைக் கடைப்பிடி.

— சுவாமி சிவானந்தா

உதயன்
உண்மை - விஞ்ஞானம் - நடுநிலைமை

இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி 22073
யாழ்ப்பாணம். 04-08-86 த பெ 23

தீர்வும் திருமலையும்

திருகோணமலை மாவட்டத்தில் உணவு முத்திரை பெறத் தகுதியானவர்களில் ஐயாயிரம் பேர் அங்கு இல்லை அவர்கள் கலவரங்களால் இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்குச் சென்று விட்டார்கள்.

இவ்வாறு இடம் பெயர்ந்தவர்களில் அனேகர் தமிழ் மக்கள். முருகாபுரி பத்தாம் குறிச்சி போன்ற கிராமங்களில் உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொள்ள ஒருவர் தானும் இல்லையாம்! அவை மட்டும் என்ன, பல தமிழ்க் கிராமங்களே ஆளரவம் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன!

பல தமிழர்கள் திருமலையில் இறந்தொழிந்து போயினர் மற்றும் ஆயிரக்கணக்கானோர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து விட்டனர்

1948 ஆம் ஆண்டுக்கு முன்னர் திருகோணமலை முழுக்க முழுக்கத் தமிழ் பேசும் மக்களின் மாவட்டமாக இருந்தது அதாவது தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தில் ஒரு பகுதி

ஆனால் இன்று... தமிழர்கள் அங்கிருந்து இடம்பெயர வேண்டிய இக்கட்டான நிலை ஆயுத பலத்தால், அரசாங்கங்களின் ஆதரவுடன் தமிழர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர் என்றே சொல்ல வேண்டும்

சிங்கள மக்களும் கலவரங்கள் காரணமாக திருமலையிலிருந்து அகதிகளாகிப் போயிருக்கின்றனர் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்படும் அதனையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் ஒரே தராசில் இட்டு எடை போடலாமா என்பதே கேள்விக்குரிய விஷயம்.

மனிதாபிமான ரீதியில் நோக்கும்போது இரு இனத்தவர்களும் இருந்த இடங்களை விட்டு வெளியேறி வெவ்வேறு இடங்களில் குடியிருக்கும் அவல நிலைக்கு உள்ளாகி இருப்பது உண்மை.

ஆனால் இரு சாராருக்கும் இடையில் பெரும் வேறுபாடு உண்டு தமிழர்கள் தமது பாரம்பரிய சொந்தப் பூமியிலிருந்து வெளியேறியவர்கள். சிங்களவர்கள் வந்த இடத்திலிருந்து வெளியேறியவர்கள்.

இந்த வேறுபாட்டுக்கு உள்ள அடிப்படைக் காரணத்தையே நாம் இங்கு ஆராய விரும்புகிறோம்.

திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் உலகப் பிரசித்தி பெற்றது அதனால் திருகோணமலை தனித் தமிழ் பேசும் மாவட்டமாக இருக்கக் கூடாது என்று 1948 ஆம் ஆண்டிலேயே உள்ளாந்தரத் திட்டம் வகுக்கப்பட்டு விட்டது அதனை வகுத்தவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல் வாதிகள்.

அந்தத் திட்டத்தின் விளைவாக திருமலையில் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் அமுலாகின. புதிய புதிய சிங்களக் கிராமங்கள் முளைத்தன.

அதன் பலாபலனாக திருமலையில் சிங்களவர் அதிகமா அல்லது தமிழர்கள் அதிகமா என்று கேட்கும் அளவுக்கு இனவிகிதாசாரம் மாறியது. இல்லை இல்லை மாற்றப்பட்டது.

இன விகிதாசாரத்தை மேலும் மாற்றியமைக்கும் நோக்குடனேயே தமிழர்கள் திருமலையில் இருந்து விரட்டப்பட்டனர். அகதிகளாக்கப்பட்டனர்

மாகாணசபைத் திட்டத்தில் திருமலைத் துறைமுகத்தை, அதன் சுற்றுடலை அதிகார சபையின் நிர்வாகத்தில் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருப்பதும் இனவிகிதாசாரத்தை மாற்றுவதோடு சம்பந்தப்பட்ட ஒன்றுதான்?

நாட்டின் சரித்திரத்தையே பெரும்பான்மைச் சமூகத்தினருக்குச் சார்பாக, சாதகமாக மாற்றி எழுதுவதில் கைதேர்ந்தவர்கள் சில சிங்கள அறிஞர்கள். அவர்களோடு போட்டி போடுபவர்கள் அரசியல்வாதிகள் அத்தகையோருக்குத் திருமலையை முழுச் சிங்கள மாவட்டமாக்குவதற்கு இனியும் நீண்டகாலம் தேவைப்படாது.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரசா உரிமை வழங்கப்பட்டு விட்டது. மாகாணசபையும் வந்தால் அங்கும் தமிழ் ஈழம் வரும் என்று கொக்கரிக்கிறார்கள் சில சிங்கள அரசியல் தலைவர்கள்.

அப்படியானால் திருமலை போன்ற தமிழர் தாயகங்களில் சிங்களவரைக் கொண்டுபோய்க் குடியேற்றுவது எந்தவகை நியாயத்தில் சேரும்?

இப்போதாயினும் சரி, எப்போதாயினும் சரி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது திருமலை விவகாரம் முக்கிய இடம் பெறவேண்டும்.

திருமலையிலிருந்து வெளியேறிய அத்தனை தமிழர்களும் தமது தாயகத்தில் சென்று மீண்டும் நிம்மதியாக வாழ வழி செய்யப்பட வேண்டும். திருமலை தமிழ்பேசும் பிரதேசம் என்றவிதத்தில் இனவிகிதாசாரம் பேணப்படவும் வேண்டும்.

திருமலை நீங்கலான தீர்வு எதுவும் தமிழர்களுக்கு ஏற்புடையதல்ல என்பதை எல்லோரும் உணர்வது அவசியம்.

அமெரிக்காவுடன் நட்புக் கொள்ள நிக்கரகுவா விருப்பம்

மனுகுவா, ஆக. 3

அமெரிக்காவுக்கு நட்புக்கரம் நீட்டியிருக்கிறார் நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஒட்டேகா

அமெரிக்காவுடன் ஒரு சமாதான உடன்பாட்டை செய்து கொள்ள அவர் விருப்பம் வெளியிட்டார்.

ஜனாதிபதி றேகனை தனது நாட்டுக்கு அழைப்பதிலும் தான் பெரு விருப்பம் கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

ஒட்டேகாவின் அரசுக்கு எதிராகப்போராடி வரும் கிளர்ச்சியாளர்களுக்கு 10 கோடி டாலர் உதவி வழங்குவது என அமெரிக்க அரசு அறிவித்திருப்பது தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது

இந்த சர்ச்சைக்கு மத்தியில் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்ய தயாராக இருப்பதாக நிக்கரகுவாத் தலைவர் அறிவித்திருப்பது உலக அரங்கில் திருப்பத்தை ஏற்படுத்துவதாக அமையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது

சிக்காகோவில் உள்ள மனித உரிமைகள் இயக்கக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே ஒட்டேகா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

எட்டு அம்சங்கள் அடங்கிய சமாதானத் திட்டம் ஒன்றையும் அவரது பேச்சின்பொழுது அவர் வெளியிட்டார்.

இத்திட்டங்கள் விரைவில் அமெரிக்க அரசாங்கத்திற்கு அனுப்பப்படும் எனவும்—

அமெரிக்கா அண்மையில் தமது நாட்டு கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டது கண்டனத்துக்குரியது எனவும் ஒட்டேகா தெரிவித்தார் (உ-ஒ)

சீனாவில் இவ்வாண்டு 7 கோடி 10 லட்சம் எலிகள் கொல்லப்பட்டன

பீகிங், ஆக. 3

இந்த ஆண்டு ஆரம்பித்ததில் இருந்து சீனாவில் உள்ள ஷீஜியாங் மாகாணத்தில் 7 கோடி 10 லட்சத்துக்கு அதிகமான எலிகள் கொல்லப்பட்டன

நவசீன செய்தி ஸ்தாபனம் இதனை அறிவித்து உள்ளது.

இதன் மூலம் 6 லட்சத்து 46 ஆயிரம் தொன் உணவுப் பொருள்கள் காப்பாற்றப்பட்டன என்றும் அச்செய்தி கூறுகின்றது.

சீனாவில் 3 மனிதருக்கு ஓர் எலி வீதம் காணப்படுகின்றன

சீனாவில் 300 கோடி எலிகளுக்கு மேல் உள்ளன ஒன்றரைக்கோடி தொன் உணவு தானியங்களை இவை உண்ணுகின்றன — இப்படித் தெரிவிக்கப்படுகிறது (இ-எ)

காமன்வெல்த் கூட்டம் ஆரம்பம்

லண்டன், ஆக 3

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்வதற்காக ஏழு நாடுகள் கலந்து கொள்ளும் காமன்வெல்த்தின் சிறிய உச்சி மாநாடு இன்று லண்டனில் ஆரம்பமாகின்றது

இதில் பிரிட்டன், இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா, ஸிம்பாப்வே, பஹாமாஸ் ஆகிய நாடுகளின் பிரதம மந்திரிகளும் ஸாம்பியா ஜனாதிபதியும் கலந்து கொள்கின்றனர். உ-ஒ)

வெளி உலகில்

கூர்க்கா வீரர்கள் கைது

இந்திய வட கிழக்கு நகரமான டார்ஜிலிங்கில் கடந்த ஒருவார காலமாக கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியினருக்கு எதிராக ஆயுதப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது பலர் பலியானார்கள். 200க்கும் அதிகமானோர் கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தலைமறைவு வாழ்வுக்கு முற்றுப்புள்ளி

மிஸோ தேசிய முன்னணியின் சகல உறுப்பினர்களும் தலைமறைவு வாழ்வை முடித்துக் கொண்டுள்ளதாகவும் அவர்களுக்கு எவ்விதமான இடையூறுகளும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் மத்திய அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது

மலேஷிய தேர்தல்கள்

மலேஷியாவில் நடைபெற்றுவரும் தேர்தல்களில் நாடாளுமன்றத்திற்கு 177 உறுப்பினர்களும் மாநில சட்டசபைகளுக்கு 351 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்தல் முடிவுகள் நாளைமுதல் வெளிவரும்.

கர்நாடகத்தில் குடியமர்வு

இலங்கையிலிருந்து இந்திய குடியுரிமை பெற்றுச் சென்றவர்களில் 875 குடும்பங்கள் கர்நாடக மாநிலத்தில் குடியமர்த்தப்படவுள்ளார்கள். இதற்காக ஒருகோடியே 32 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது

வெளிநாட்டு ஆயுதங்கள்

பஞ்சாப் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட பலரிடம் வெளிநாட்டு அடையாளம் உள்ள ஆயுதங்களும் வெடிமருந்துகளும் பெருமளவில் கைப்பற்றப்பட்டுள்ளன. (உ-ஒ)

கம்யூனிஸ்ட் ஆதிக்கம்

ஆபிரிக்க தேசியகாங்கிரஸின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 30 பேரில் 18 பேர் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்கள் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

செல்வாக்கு அதிகரிப்பு

பிரிட்டனின் ஆளும் கட்சியான கன்சவேடிவ் கட்சியின்செல்வாக்கு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கின்றது

உறைபனி தோன்றும்

அணு ஆயுதப் போர் ஏற்பட்டால் வளிமண்டலப் பகுதி மாசுபட்டு பூமியில் பயங்கர உறைபனி தோன்றும் என மாஸ்கோவிலிருந்து வெளிவரும் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

நீதியரசர் சுட்டுக்கொலை

கொலம்பியாவில் கடந்த நவம்பர் மாதம் வெடிகுண்டுத் தகர்வினால் கொல்லப்பட்ட 12 நீதிபதிகளுக்கு பின் நேற்று மேலும் ஒரு உயர் நீதியரசர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெனிஸ் நகரம் உயருகிறது

வெனிஸ், ஆக. 3

புராதன வெனிஸ் நகரம் மண்ணுக்குள் புதைந்து போவது நின்றுவிட்டது. மீண்டும் பூமிக்கு மேலே எழும்பிக் கொண்டிருக்கிறது—

இப்படி பூகர்ப்ப ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

1970 ஆம் ஆண்டிற்கு பின்னர் 2 செண்டி மீற்றர் நிலத்துக்கு மேலே எழும்பி விட்டது.

1950-70க்கும் இடையில் இந்த நகரம் நிலத்தினுள் வேகமாக இறங்கி கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

றேகன் கண்டனம்

வாஷிங்டன், ஆக 3

புடைவை இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வகையில் நிறைவேற்றப்படவிருக்கும் கண்டிப்பான சட்டமொன்றை ஜனாதிபதி தமது தடுப்புரிமையைப் பயன்படுத்தி ஒத்திவைப்பதைத் தவிர்க்கும் முகமாக அமெரிக்க காங்கிரஸ் மாற்றுத்திட்டம் ஒன்றைத் தயாரித்து வருவது குறித்து ஜனாதிபதி றேகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இச்சட்டம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுவிட்டது பின்னர் இது செனட் சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட வேண்டும்

இந்நடவடிக்கையினால் அமெரிக்காவிற்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படுமெனவும் றேகன் எச்சரித்துள்ளார். (ஒ)

கால்நடைகளுக்கு காப்புறுதித் திட்டம்
விஸ்தரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக 4

யாழ் மாவட்டத்தில் கால்நடைகளின் காப்புறுதியினை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

வரட்சி காரணமாகவும் தீனித் தட்டுப்பாடு காரணமாகவும் கால்நடை வளர்ப்போர் இப்போது அவற்றுக்கு காப்புறுதி செய்வதில் அதிக ஈடுபாடு காட்டுகிறார்கள்.

இந்தக் காப்புறுதியின் கீழ் கால்நடை இழப்பின்போது ஆகக்கூடுதலாக ஆறாயிரம் ரூபா வரைக்கும் நஷ்டஈடு கிடைக்கும். பல ஆடுகளை ஒரேமுறையில் செய்யும் காப்புறுதிக்குக் கழிவும் தரப்படும். தொழுவத்துடன் பசுக்களை காப்புறுதி செய்யும்போது இன்னும் அதிக கழிவு கிடைக்கும்.

பசுக்களுக்கு மட்டுமன்றி பாரம் இழுக்கும் எருதுகள், எருமைகள், உழவு எருமைகளுக்கும் காப்புறுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

கமத்தொழில் காப்புறுதி அலுவலக அதிகாரிகள் உதயனிடம் இத்தகவல்களைத் தெரிவித்தனர். (உ-9)

வாசகர் திருமுகம்

வீதிகளில் வாகன வேகத் தணிப்பு வரம்பு

சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள இக் காலத்தில் அரச காவல் பகுதியினர் இயங்குவதில்லை. இதனால் வாகனச் சாரதிகள் தமது வாகனங்களை அதிவேகமாக ஓட்டிச் செல்வதால் பாரதூரமான விபத்துக்கள் சம்பவிக்கின்றன.

இதை உணர்ந்த பொது மக்கள் பொது சன பாவிப்புக்குரிய வீதிகளில் — ஆலயங்கள், பாடசாலைகள், சந்தைகள் வரும் இடங்களில், றோட்டில் வரம்பு உயர்த்திக் கட்டிவிடுகிறார்கள் அதுவும் கல் போட்டு தார் ஊற்றி சில இடங்களில் 6 அங்குலம் முதல் 9 அங்குலம் வரை வரம்பு அமைக்கப்பட்டுள்ளது

குறிப்பாக நல்லூர்க் கந்தன் வாசல், கச்சேரி நல்லூர் றோட், சாயக்காரப் பிள்ளையார் கோவில் போன்றவற்றில் உள்ள வரம்புகள் மிகவும் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளன.

இதனால் வாகனங்கள் பாரத்துடன் வந்து ஏறி இறங்கி விழும்போது அவற்றின் வில்லுத்தகடு, அதிர்ச்சி உறிஞ்சி (Shock Absorber) பாதிக்கப்படுகின்றன.

நோயாளரை ஏற்றி வரும் வாகனங்களுக்கும் இதே கதிதான். நோயாளர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

உண்மையில் பொது இடங்களில் வேகத்தணிப்புக்காக வரம்புகள் அவசியம்தான். ஆனால் அவை தெரு மட்டத்தில் இருந்து 2அங்குலம் முதல் 3 அங்குலத்துக்குமேல் உயரக்கூடாது.

அத்துடன் குவிந்த வடிவில் வரம்புகளை அமைத்தல் அவசியமாகும். தற்போதுள்ளது போல் 6'' முதல் 9'' வரையிலான உயரத்தில் கட்டப்பட்டுள்ள வரம்புகளால் வாகனச் சொந்தகாரர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குகிறார்கள் எனவே பொதுமக்களும் அதிகாரிகளும் மனிதாபிமான நோக்குடன் உணர்ந்து, உயரமான வரம்புகளை 3'' உயரத்திற்கு மேற்படாமல் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொக்குவில் [illegible]

பொய்யாமொழி

குறள்:

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

பொருள்:

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது மற்றவர்க்குக் கொடுப்பது எல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

சாட்டி குடிதண்ணீர்க் கிணற்றை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

வேலணை, ஆக, 4

வேலணை கிழக்குக் கிராமத்திலுள்ள சாட்டி குடிதண்ணீர்க் கிணறின் நீர் உவர்நீராக மாறுமல் பாதுகாப்பதற்கும் —

அக்கிணற்றைச் சுற்றியுள்ள 135 பரப்புக் காணியைப் பாதுகாப்பதற்குமாக 2லட்சம் ரூபா செலவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்

இதற்கான நிதி யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் 1986ஆம்ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதியின் மூலம் மேற்படி கிணற்றையும் அதன் நீர்வலயப் பகுதியையும் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படும்.

இந்தப் பகுதியில் மண் எடுப்பதும் தடைசெய்யப்படும்,

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் 1986ஆம் ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் வேலணை உப அலுவலகப்பிரிவு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட்ட மற்றைய செயல் திட்டங்கள் வருமாறு:

வேலணை உப அலுவலகத்திலுள்ள நூலக கட்டடத்தை விஸ்தரித்து திருத்தியமைப்பதற்காக 25 ஆயிரம் ரூபா—

வேலணை மேற்கு ஐயனார்வீதி திருத்தியமைப்பதற்காக 10 ஆயிரம் ரூபா —

வேலணை - புங்குடுதீவு பிரதான வீதியிலிருந்து ஆரம்பமாகும் கருங்காலி புளியங்கூடல் பிரதான வீதிவரையுள்ள வெட்டிக் விடமைப்புத்திட்டப் பிரவேச பாதை திருத்தியமைப்பதற்காக 50ஆயிரம் ரூபா ஆகியவை. (உ)

ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஆக 4

செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசைகள் வழமையாக நடக்க ஏற்பாடு செய்யும்படியும், வருடாந்த திருவிழாக்கள் உரிய காலத்தில் ஆரம்பமாக நடவடிக்கை எடுக்கும்படியும் கோரும் மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை கோவிற்புலம் அன்னையார் ஆலயத்தைச் சார்ந்தவர்களால் இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது (உ-ஒ)

மூளாய் இந்து இளைஞர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக 4

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினர், கோளறு திருப்பதிக மனன எழுத்துப் போட்டியை மாணவர்களுக்கு நடத்தவுள்ளனர்.

பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு போட்டிகள் ஆகஸ்ட் 3ஆம் வாரத்திலும் மத்திய பிரிவு, மேல் பிரிவு போட்டிகள் ஆகஸ்ட் கடைசி வாரத்திலும் நடத்த ஏற்பாடாகி உள்ளது. (ஒ)

சைவப்பெரியார் குருபூசை

யாழ்ப்பாணம், ஆக 4

சைவப் பெரியார் சு சிவபாதசுந்தரம் குருபூசை விழா வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. ஈ. அருணாசலம் விழாவிற்குத் தலைமை வகிப்பார். (ஒ)

தையல் வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 4

நவாலி இந்து சமய விருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருக்கும் தையல் பயிற்சி வகுப்பை யாழ் தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. அ. இராசநாயகம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்;

நவாலி மாதர் சங்க போஷகர் டாக்டர் திருமதி. க சரவணபவானந்தன், இந்துசமய விருத்திச் சங்கச் செயலாளர் திரு. இ கணேசலிங்கம் திரு. செ. சச்சிதானந்த சோதி, திரு வி. இராசையா ஆகியோர் பேசினார்கள். (உ-9)

வங்களாவடி முருகனுக்கு நாளை தீர்த்தம்

வேலணை, ஆக. 4

வேலணை வங்களாவடி முருகன் ஆலய அலங்கார உற்சவங்கள் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை வெள்ளைக் கடற்கரையில் தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் திருக்கல்யாணமும் இடம்பெறும் (ஒ-167)

சமய சந்நிதிகளில்

மாவைகந்தன் தேர் திருவிழா

யாழ்ப்பாணம், ஆக. 4

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறுகின்றது. பஞ்சரதங்களும் வீதிவலம் வரும்

நாளை செவ்வாய்க்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையில் மாவை கந்தனின் தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

ஆடி அமாவாசை தினமும் நாளை என்பது குறிப்பிடத்தக்கது (உ-ஒ)

நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக 4

நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை கொடியேற்ற மஹோற்சவத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 13 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா நடைபெற்று மறுதினம் தீர்த்த மஹோற்சவத்துடன் உற்சவம் நிறைவு பெறும் (உ)

சாவகச்சேரியில் சுமங்கலி பூசை

யாழ்ப்பாணம், ஆக 4

சாவகச்சேரி அருள்மிகு துர்க்கை அம்பாள் ஆலய சுமங்கலிதீப பூசை வரும் வெள்ளிக்கிழமை 8ம் திகதி மாலை 8.00 மணிக்கு நடைபெறும்.

காலை அம்பாளுக்கு 108 சங்குகளால் அபிஷேகமும் இடம்பெறும்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான லட்சார்ச்சனை 7ஆம்திகதி வியாழக்கிழமையன்று பூர்த்தியடையும்.

இவ்வாறு ஆலய தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா தெரிவித்தார். (உ-ஒ)

கெயின்ஸ்
நெல்லியடி
நடைபெறுகின்ற பிரத்தியேக வகுப்புகள்
சுருக்கெழுத்து, தட்டெழுத்து
(தமிழ் - ஆங்கிலம்)
லண்டன் பிட்மன் பரீட்சைகள்
நடத்தப்பட்டு வருகின்றன.
SPOKEN ENGLISH with GRAMMER
புதிய பிரிவுகள் ஆகஸ்ட 9இல் ஆரம்பமாகும்

உதயன்

04-08-1986 திங்கட்கிழமை

கெயின்ஸ் கல்வி நிலையம்
நெல்லியடி
87, A/L 88 புதிய பிரிவு
ஆகஸ்ட 7இல் ஆரம்பம்
பொருளியல் - திரு. குமாரவேல்
மனையியல் - திரு. மரியதாஸ்
அளவையியல் - திரு. கேசதன்
வர்த்தகம் - ஜெகதீஸ்
தமிழ் - தேவராசா
இந்து நாகரிகம் - திருமதி அருள்நங்கை

திருமலை தமிழ் அகதிகள்
உதவி இன்றி அவதி
2 மாதமாக உணவுப்பொருள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஆக 4
திருமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் அகதிகளுக்கான உணவுப் பொருள்கள் கடந்த இரண்டு மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு திருமலை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த அகதிகளையும் மீண்டும் தங்கள் இடங்களுக்கு அனுப்புமாறு அகதிகள் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

இடம் பெயர்ந்தோர் மீண்டும் தங்கள் இடங்களுக்கு திரும்பும் பட்சத்தில் அவர்களுக்கான சகல உதவிகளையும் வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சு தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே திருமலை மாவட்டத்தில் இருந்து தமிழ் மக்கள் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். (இ-10)

இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக 4
சர்வதேச சமாதான ஆண்டை ஒட்டி வடமராட்சிப் பகுதி இளைஞர், யுவதிகளுக்கு இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கு நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு உள்ளன.

வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகமும் அறவழிப் போராட்டக் குழுவும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்தத் தீர்மானித்துள்ளன. (இ-எ)

வாழை தென்னைகளை அழியாதீர்!

யாழ்ப்பாணம், ஆக 4
வாழை, தென்னைகளை கோயில் திருவிழா, மரண நிகழ்ச்சிகளின் போது சோடனை செய்யப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும்படி பருத்தித்துறைப் பிரசைகள் குழு பொதுமக்களைக் கேட்டுள்ளது

இது சம்பந்தமான தீர்மானம் ஒன்று குழுக் கூட்டத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்குப் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கேட்டுள்ளார். (உ-எ)

பதில் உபவேந்தர்

யாழ்ப்பாணம், ஆக 4
உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறுகிய காலவிஜயம் மேற்கொண்டு மலேசியா செல்ல இருப்பதால் பேராசிரியர் எஸ். பாலகிருஷ்ணன் பதில் உபவேந்தராகக் கடமையேற்றுள்ளார்.

பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் விஞ்ஞான பீடத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டரங்கு

உதைபந்தாட்டம்:- 19 வயதுப் பிரிவு:

மகாஜனா சாம்பியன்
திணைக்கள சுற்றுப்போட்டியில்

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஆக. 4
யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி அணி சாம்பியனானது.

19 வயதுக்குட்பட்ட பிரிவு அணிகளுக்கிடையேயான இந்த இறுதிப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி அணியை மகாஜனா அணி 1—0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்ததன் மூலம் சுற்றுப் போட்டியில் சாம்பியனாகியது.

இப்போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்றது

ஆட்ட நேர இடைவேளையின் பின்னர் மகாஜனா அணி வெற்றிக்கான தனது கோலைப் போட்டது.

நேற்றைய போட்டிக்கு வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த போட்டிக்கு திரு ஏ மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகளில்—

ஒஸ்மானியா கல்லூரி அணி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை 8—0 என்ற கோல் அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

மகாஜனா கல்லூரி அணி யாழ் இந்துக் கல்லூரி அணியுடன் மோதிய போது ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந்த அரை இறுதி போட்டியில் யாழ் இந்து அணி மீண்டும் ஆடுவதற்கு மறுக்கவே போட்டியின்றியே மகாஜனா அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது (இ—7)

காமன்வெல்த் விளையாட்டு நியூஸிலாந்தில்

லண்டன், ஆக.3
எடின்பரோவில் நடைபெற்றுவந்த காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுப்போட்டி முடிவடைந்தது

அடுத்த போட்டி 1990 ஆம் ஆண்டு நியூஸிலாந்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

எடின்பரோவில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை 32 நாடுகள் பகிஷ்கரித்திருந்தன. (இ)

புளொட் ஒரு பயங்கரவாத இயக்கம் என நான் கருதவில்லை
ஹென்றி பெரேரா சாட்சியம்

கொழும்பு, ஆக 4
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) பயங்கரவாத இயக்கம் என்று நான் கருதவில்லை நானும் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவன்.

இப்படி உருவரசே ஹென்றி பெரேரா சொன்னார்.

குண்டுகள் வைத்திருந்ததாக அவர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்குச் சம்பந்தமாக பொலிஸாருக்கு அவர் அளித்த வாக்கு மூலம் செல்லுபடியானதா என்பது பற்றிய விசாரணை தற்சமயம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு எச். டபிள்யு. சேனநாயக்கா முன்னிலையில் நடைபெறுகிறது.

கடந்த வியாழக்கிழமை நடந்த விசாரணையின் போது ஹென்றி பெரேரா தொடர்ந்து சாட்சியமளித்தார்.

ஹென்றி பெரேரா மேலும் சொன்னதாவது:

பொலிஸ் அதிபர் சந்திரா பெர்னாண்டோ எனது வாக்கு மூலத்தைப் பதிந்தார். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை பயங்கரவாதிகள் இயக்கம் என்று நான் அந்த வாக்குமூலத்தில் கூறவே இல்லை

ஏனைய போராளி அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும் நான் பயங்கரவாதிகள் என்று கூறவில்லை

இப்படி ஹென்றி பெரேரா சொன்னார் (இ-எ)

220 தொன் தங்கத்தில் நாணயம்

டோக்கியோ, ஆக 4
ஜப்பானிய அரசர் ஹிரோஹிட்டோ ஆட்சிக்கு வந்து 60 ஆண்டுகள் பூர்த்தியாவதைக் கொண்டாடுமுகமாக ஜப்பானிய அரசாங்கம் தங்க நாணயங்களை வெளியிட உள்ளது.

இதற்காக 220 தொன் தங்கம் வாங்க ஜப்பானிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனிடையில் கடந்த ஜனவரிக்குப் பின்னர் உலகச்சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்து உள்ளது. ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை 358 டாலர்களாக அதிகரித்து உள்ளது (இ-எ)

பாண் நிறை குறைவு குறித்து கருத்தரங்கில்
அதிகாரிகள் கவனத்துக்கு

பலாலி, ஆக. 4
தெல்லிப்பழைப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு விடப்படும் பாண் நிறை குறைவாகவும், தரம் குறைவாகவும் இருப்பதனைப் பாவனையாளர் சங்கங்கள் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தன.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில், தெல்லிப்பழைப் பிரதேச பாவனையாளர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு, தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பாவனையாளர் சங்கக் கருத்தரங்கில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டது.

தற்போதைய சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி அதிக விலைக்குப் பொருள்களை விற்றல், பதுக்கல் நடவடிக்கைகள் போன்றவற்றினை மேற்கொள்ளும் வியாபாரிகளினைச் சமூக விரோதிகளாகக் கணிக்க வேண்டும் என்று கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

அவர்களுக்கும் பாவனையாளர் சங்கத்தாரின் ஊடாக கடுமையான தண்டனைகள் வழங்கப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்படும்.

குடாநாடு முழுவதிலும் உள்ள இவ்வாறான பதுக்கல் — விலைகூட்டி விற்றல், கலப்படம் போன்ற நடவடிக்கைகளைக் கண்காணித்து தமக்கு அறிவிக்க பாவனையாளர் சங்கங்கள் மிக விழிப்பாகச் செயல்பட வேண்டுமென கருத்தரங்கில் கலந்துகொண்ட அதிகாரிகள் வலியுறுத்தினர் (இ-119)

மாகாணசபை வந்தபின் வன்செயலில் ஈடுபடும் குழுக்கள் மீது கடும் நடவடிக்கை
ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஆக. 4
மாகாண சபைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன் வன்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்

சிலாபத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி மேலும் சொன்னதாவது:

சுதந்திரம் அடைந்தவுடன் தமிழர்கள் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை எழுப்பினர்.

பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சமஷ்டி ஆட்சி அமைப்பைக் கேட்டனர்

இப்போது தனி ராஜ்ஜியம் கேட்டுப் போராடுகின்றனர்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ எ)

25 புதிய தையல் மெஷின்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஆக 4
குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு 25 புதிய சிங்கர் தையல் இயந்திரங்களை அகதிகள் புனர்வாழ்வு நிதியம் அன்பளிப்புச் செய்ய உள்ளது.

இம்மாதம் 11 ஆம் திகதி காலை யாழ்ப்பாணம் வை எம் சி ஏ. மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் இத்தையல் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்படும்.

யாழ் அரச அதிபர் தையல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்வார். (உ-எ)

மண்டைதீவு மீன்தூள் ஆலை மூடப்படுமா?
இயந்திரங்கள், கட்டட பகுதிகள் அகற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஆக 4
மண்டைதீவில் இயங்கி வந்த வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மீன்தூள் ஆலை இயந்திரங்களும், கட்டடங்களின் சில பகுதிகளும் கழற்றப்பட்டு வருகின்றன.

மண்டைதீவு, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இராணுவ மினிமுகாம் அமைந்தபின் பாதுகாப்பின்மையாலும் பஸ் போக்குவரத்துத் தடையாலும் இந்த ஆலை இயங்காது இருந்து வந்தது.

பிரஸ்தாப ஆலை செயலிழந்ததால் இக்கிராமத்தைச் சேர்ந்த பலதொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்

இந்த ஆலையின் காவல் புரிந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அண்மையில் காணாமல் போனதைத் தொடர்ந்து இந்த ஆலை பாதுகாப்பற்றதாகவே கடந்த இரு வாரங்களாக இருந்து வந்தது.

இந்த ஆலையின் இயந்திரங்களை மேற்படி சமாசம் இவ்விடத்தை விட்டு பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதை அடுத்து இக்கட்டடத்தின் சில பகுதிகளும் கழற்றப்பட்டு வருகின்றன. இலங்கையில் அநேகமான பகுதிகளில் கோழி உணவுகளுக்குத் தேவையான கொழுப்புச்சத்தை இந்த ஆலையே ஈடுசெய்துவந்தது.

வடபகுதிக்கு விஜயம் செய்த கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இந்த ஆலைக்கும் விஜயஞ்செய்து மலையகத்தில் கால்நடை உணவுத் தேவைக்கு இந்த ஆலையின் உற்பத்தியைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார்.

மீன்எண்ணை தயாரிப்பதற்கான கருவிகளையும், இயந்திரங்களையும் இணைத்து இதை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வந்தன. (இ)

மூதூர்த் தொகுதியில் 4 தமிழர்கள் சுட்டுக் கொலை

திருகோணமலை, ஆக 4
மூதூரில் ஆயுதப்படையினரின் தேடுதலின் போது நான்கு தமிழர்கள் துப்பாக்கிச் சூடுபட்டு இறந்தனர்.

அவர்களின் பெயர் விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

கட்டைப்பறிச்சான் கிராமத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம் பெற்றது.

கூனித்தீவு, மல்லிகைத்தீவு சம்பூர் ஆகிய கிராமங்களில் ஆயுதப்படையினர் தீவிர தேடுதலில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர். (இ-எ-150)

செல்வச்சந்நிதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசைகள் குழுச் செயலாளர் திரு வி. இரத்தினராசா மேற்கண்ட தகவலை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ-68)

மிளகாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள சிப்பாய்கள் கைது செய்தனர்.

சாஸ்திரிகூழாங்குளத்தைச் சேர்ந்த வன்னிய சிங்கம் சிவலிங்கம் (24 வயது) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்

இது தொடர்பாக வவுனியா பிரசைகள் குழுவினர் இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அறிந்து சம்பந்தப்பட்டவர் மேல் சந்தேகம் இருப்பதாகவும் விசாரணை நடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாம்.

விடுதலைப் . .

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

மரணமடைந்தனர்.

கவில், விசு, சங்கர், சிவநாத், நிதி, சாந்தன், சசி ஆகியோரே இந்த ஏழுபேரும் ஆவர்.

இவர்களுக்கு வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அறிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டனர். (இ)

மட்டக்களப்பில் கடத்தப்பட்ட எண்மர்
இன்னும் விடுதலை இல்லை

மட்டக்களப்பு, ஆக 4
மட்டக்களப்பில் இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் எட்டு தமிழ்ப் பிரமுகர்களும் நேற்றுக் காலைவரை விடுவிக்கப்படவில்லை

கடத்திச் செல்லப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:

1. பி. சின்னத்தம்பி, வயது 80 மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. சி. சம்பந்தமூர்த்தியின் தந்தை இவர் செங்கலடி அரிசி ஆலையில் இருந்த சமயம் கடந்த சனி பிற்பகல் 2-30 மணியளவில் இவர் கடத்திச் செல்லப்பட்டார்.

2. சி. சண்முகலிங்கம் வயது 30. திரு சம்பந்தமூர்த்தியின் தம்பி இவரும் தந்தையுடன் சேர்த்துக் கடத்தப்பட்டார்.

3 எல். நடராசா, வயது 55. செங்கலடி பெட்ரோல் நிலைய உரிமையாளர்.

4. பி குணபாலசிங்கம், வயது 50 கல்குடா தொகுதி விவசாய அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர்.

5 எஸ். பஞ்சாட்சரம், வயது 52 செங்கலடி மதுபான நிலைய உரிமையாளர்.

6. பி சிவலிங்கம், வயது 48. சித்தாண்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்.

7. மு. மகேந்திரன், வயது 38. பகுதிநேர புகைப்படப்பிடிப்பாளர். இந்த 5 பேரும் சனிக்கிழமை வீடுகளில் வைத்தே கடத்தப் பட்டனர்.

8 எஸ் தங்கராசா, வயது 45. செங்கலடி கிராம சேவையாளர். இவர் வெள்ளி இரவு 10 மணியளவில் கடத்தப்பட்டார்.

தலைவேறு ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகின்றது.

தந்தை, தாய் மகன் ஆகியோரின் சடலங்களான இவற்றை கமாண்டோ பொலிஸ் படையினர் பொத்துவில் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சடலங்களில் வெட்டுக் காயங்கள்தான் காணப்பட்டன.

இறந்த குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு இளைஞன் கொழும்பில் பொலிஸ் கமாண்டோ பயிற்சி பெற்று வருகின்றார்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொத்துவில் பகுதி வெறிச்சோடியது கடைகள் பூட்டப்பட்டன

நகரில் ஆயுதப் படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டது இன்ஸ்பெக்டர் ஏத்தம் பகுதியில் குடியிருந்துவந்த சுமார் 300 தமிழர்கள் அச்சம் காரணமாக குடிபெயர்ந்து சென்றனர்.

பொத்துவில் நகரிலும் தமிழ்க் குடும்பங்கள் பாதுகாப்புக்கருதி வேறிடங்களுக்குச் சென்று விட்டன

கொழும்பில் பொலீஸ் கமாண்டோ பயிற்சி பெறும் மகனின் வருகையை எதிர்பார்த்து பெற்றோரினதும் சகோதரனதும் சடலங்கள் நேற்றுமாலை பொத்துவில் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தன. (இ-எ-84)

தமிழர்பிரச்சினை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகின்றன

இப்படி ரஷ்யத் தலைவர் திரு கோர்பச்சேவ் சொன்னார்.

அணிசேரா இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர் இந்தியாவே.

உலகளாவிய ரீதியில் ரஷ்ய—இந்திய உறவுகள் ஸ்திரமான நிலையில் உள்ளன—என்றும் ரஷ்யத் தலைவர் குறிப்பிட்டார். (அ-எ)

[illegible]

இராமநாதபிள்ளை சிவசுப்பிரமணியம்

திருகோணமலையைச் சேர்ந்த இராமநாதபிள்ளை சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், கணக்காளர் பிரிவு, பிரிட்டிஷ் கடற்படைத்தளம் திருமலை) நேற்று காலை சங்குவேலியில் காலமானார். இவர் பாலாம்பிகையின் அன்புக் கணவரும், இராமச்சந்திரன் (லண்டன்), நரேந்திரன் (லண்டன்), பாலேந்திரன் (லண்டன்), திருமதி வில்வராணி வரதசுந்தரம் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சிவகாமி அம்மா செல்வரெட்ணம், திருமதி வேதநாயகம் அழகம்மா, திரு நடேசபிள்ளை, திருமதி சிவசண்முகராஜா தனலட்சுமி ஆகியோரின் சகோதரரும், திருமதி பத்மாவதி நடேசபிள்ளை, இராஜா சதானந்தன், இராஜா இராமநாதன் திருமதி லீலா விமலட், நிமால் இராஜா (இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதிக் கிளை), ஆகியோரின் மைத்துனரும், இளைப்பாறிய ஆசிரியர் வே வரதசுந்தரம், திருமதி இரட்ணாவதி இராமச்சந்திரன், திருமதி சாந்தினி நரேந்திரன், திருமதி சுசாந்தினி பாலேந்திரன், திருமதி கமலவேணி ஜெயச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஸ்ரீதரன் (ஸாம்பியா), சுபதரன் (ஸாம்பியா), வித்தியாதரன் (உதயன் — ஆசிரியபீடம்), செல்வி யசோதை, சசிதரன் (இந்தியா) ரவிதரன், துளசிதரன் (யாழ் - இந்துக்கல்லூரி) ஆகியோரின் பெரியதகப்பனும், வாசுகி, வத்சலா, அபிராமி, ரம்யா, லக்ஷ்மிரா, பிரகாஷ், நிரேஷ், செந்தூரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 60/5, அருளானந்தம் ஒழுங்கை, சங்குவேலி, மானிப்பாய் இல்லத்தில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 04 — 08 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 8 N 86.